# DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF ADDITIONAL DISTRICT MUNSIF, TENKASI.

O.S.No.29/2024

Deposition of witness for PW1

| | | |
|---|---|---|
| Name | : | அருணாசலம் ரெட்டியார் |
| Father's Name | : | அழகு ரெட்டியார் |
| Village | : | |
| Taluk | : | |
| Religion | : | |
| Age | : | 65 |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 02.02.2026.

<u>முதல் விசாரணை</u>:

நான் இந்த வழக்கில் வாதி. என்னுடைய முதல் விசாரணைக்காக நிரூபண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். இந்த நிரூபண வாக்குமூலம் என்னுடைய தகவலின் அடிப்படையிலேயே தயார் செய்யப்பட்டுள்ளது. நிரூபண வாக்குமூலத்தை படித்துப்பார்த்து உண்மை என உறுதி கூறி கையொப்பம் செய்துள்ளேன்.

1. 07.10.1993 தேதியில் வாதிக்கு 1ம் பிரதிவாதி தனக்காகவும், அவரது மைனர் மக்களுக்காகவும் வேண்டி எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரம் அசல் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

(மேற்படி வா.சா.ஆ.1 ஆவணம் ரத்து செய்ப்பட்டதாகவும், வா.சா.ஆ.1 க்கும், இந்த வழக்கிற்கும் எந்த தொடர்பும் இல்லை என பிரதிவாதி தரப்பில் ஆட்சேபனை செய்யப்பட்டது. மேற்படி ஆட்சேபனை தீர்ப்பின்போது பரிசீலனை செய்யப்படும். )

2. 11.10.1993 தேதியில் 1ம் பிரதிவாதியின் பிரஸ்தாப கிரையப்பத்திரத்தின் கணினி வழி நகல் வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. 30.08.2023 தேதியில் வாதி வழக்கறிஞர் மூலம் பிரதிவாதிகளுக்கு அனுப்பிய அறிவிப்பு அலுவலக நகல் ரசீதுடன் வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4. 02.09.2023 தேதியில் பிரதிவாதிகள் மேற்படி அறிவிப்பினை பெற்றுக்கொண்ட ஒப்புகை அட்டை (எண்ணம்–2) வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை மற்றொரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

ஒம்/–K.N.குரு
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
தென்காசி